

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (14.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கோகி ஹோல்டிங்–ன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000–க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, கோகி குழுமத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அலுவலர் பிரதாப் தெய்வநாயகம், கோகி இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் பாலசுப்ரமணியன கோதண்ட ராமன், உற்பத்தி திட்டத்தின் தலைவர் தமிழரசன் கலைவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஜப்பானின் - ஹிகோகி பவர் டூல்ஸ் நிறுவனம் சார்பில் - ரூ.700 கோடியில்

# 1000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் - மின் கருவிகள் உற்பத்தி ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**சென்னை, ஆக. 16-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (14.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கோகி ஹோல்டிங்ன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்து, அதனை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, ஒன்றிய அரசின் 2024-25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த உலகளாவிய நிறுவனமான கோகி ஹோல்டிங் ஜப்பான், ஜெர்மனி, சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது. பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டுள்ள அதன் துணை நிறுவனமான ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், 15க்கும் மேற்பட்ட விற்பனை அலுவலகங்கள், 500க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட சேவை மையங்களுடன் விரிவான வலையமைப்பை கொண்டுள்ளது.

ஹிகோகி பவர் டூல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டம், மஹிந்திரா வோர்ல்டு சிட்டியில் அமைந்துள்ள தொழிற் பூங்காவில், ரூ.700 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் சுமார் 1000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நேற்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, கோகி குழுமத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அலுவலர் பிரதாப் தெய்வநாயகம், கோகி இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் பாலசுப்ரமணியன் கோதண்டராமன், உற்பத்தித் திட்டத்தின் தலைவர் தமிழரசன் கலைவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### முரசொலி மாறன் 92வது பிறந்தநாள்

## தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தருமபுரியில் திருவுருவப்படத்திற்கு

# மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

**சென்னை, 'முரசொலி' வளாக முகப்பிலுள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்கு கழக முன்னணியினர் மாலை அணிவிக்கின்றனர். மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்**



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், ஏற்கனவே திட்டமிட்டபடி தருமபுரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருப்பதால்;

முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாக செயல்பட்டவரும் ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாக பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், ஆகஸ்ட் 17 அன்று தருமபுரியில் முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

அதேநேரத்தில் வருகிற 17.8.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் கோடம்பாக்கம், `முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழக முன்னணியினர் மலர்மாலை அணிவிக்கின்றனர்.

அதுபோது ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நாள் : 14-8 -2025.** **சென்னை மாவட்ட தி.மு.க.,**

---



நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் குஞ்சப்பனை ஊராட்சிக்குட்பட்ட சுண்டப்பட்டி ஆதிவாசி கிராமத்திற்கு வனத்துறையின் உரிய அனுமதி பெற்று சாலை அமைக்கும் பணியினை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (14.08.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வனத்துறை அதிகாரிகள்,அரசு அலுவலர்கள், மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் உள்ளனர்.





கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி, சின்னவேடம்பட்டி பகுதி கழகத்திற்குட்பட்ட, 11 வது வட்டக் கழகத்தில் தமிழ் மண், மொழி, மானம் காத்திட "ஓரணியில் தமிழ்நாடு" கழக உறுப்பினர் சேர்க்கைப் பணிகளின் நிலை குறித்து, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் ஆய்வுப் பணி நடைபெற்றது. இதில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் மூலனூர் எஸ்.கார்த்திக், சின்னவேடம்பட்டி பகுதி கழகப் பொறுப்பாளர் சிவா (எ) பழனிச்சாமி, 11வது வட்டக் கழகப் பொறுப்பாளர் யாஸ்மின் சேட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜாவின் முன்னெடுப்பில், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி இராசகோபாலசாமி அரசினர் கலைக்கல்லூரியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம், தமிழ்நாடு ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், தேர்வு செய்யப்பட்ட 303 நபர்களுக்கு நிகழ்விடத்திலேயே பணிநியமன ஆணைகளை தொழில்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன் ஆகியோர் வழங்கினர்.



கும்பகோணம் மாநகராட்சி 6 வார்டு பாலக்கரையில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதி ரூ 16.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, குடிமைப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், மாநகராட்சி மேயர் க.சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், மாநகர ஆணையர், பகுதிக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மண்டல குழுத் தலைவர்கள், மாநகர கழக நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம்!

## ஆதாரை அடையாள ஆவணமாக தேர்தல் ஆணையம் ஏற்க வேண்டும்!

**நீக்கப்பட்ட 65 இலட்சம் பேரின் விவரங்களை இணையதளத்தில் வெளியிடுக! உச்சநீதிமன்றம் உத்தரவு!**

*புதுடெல்லி, ஆக. 16 -*

*ஆதாரை அடையாள ஆவணமாக தேர்தல் ஆணையம் ஏற்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*பீகாரில் சட்டமன்றத் தேர்தல் வர உள்ள நிலையில் தேர்தல் ஆணையம் சர்ச்சைக்குரிய வகையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொண்டது. கடந்த ஆகஸ்ட் 1 இல் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் அனைவரும் உயிரிழந்தவர்கள், புலம்பெயர்ந்தவர்கள், சட்டவிரோத குடியேறிகள் என ஆணையம் தெரிவித்தது. இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் எதிர்க்கட்சிகள் மற்றும் ஜனநாய சீர்திருத்த சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் வழக்கு தொடர்ந்தன.*

*இந்த வார தொடங்கில் இந்த வழக்கில் பிராமண பத்திரம் தாக்கல் செய்த் தேர்தல் ஆணையம், சட்டப்படி, நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை மனுதாரர்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்திருந்தது. இந்நிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிபதிகள் சூர்யகாந்த், ஜாய்மாலா ஆகியோர் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, பீகார் வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் விவரங்களை தேர்தல் ஆணையம் அதன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆகஸ்ட் 19 ஆம் தேதிக்குள் வெளியிட நீதிபதிகள் அதிரடி உத்தரவு பிறப்பித்தனர்.*

*மேலும் இதுதொடர்பான அறிக்கையை 22 ஆம் தேதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தினர். மக்கள் தெளிவு பெறவும், திருத்தங்களுக்கு விண்ணப்பிக்க ஏதுவாகவும் நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்கள் குறித்த வெளிப்படைத் தன்மை தேவை என நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தத்தில், ஆதார் அட்டையையும், EPIC நம்பர்களையும் அடையாள ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனத் தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.*

*முன்னதாக ஆதார் அட்டை, குடியுரிமை ஆவணமாக கருதப்படாது என தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்த நிலையில் இந்த உத்தரவு வந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் பணிகள் வாக்காளர்களுக்கு வசதியாகவும், சிரமத்தை ஏற்படுத்தாத வகையிலும் இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அறிவுரை வழங்கியது.*

---



திருவாரூர் மாவட்ட கூட்டுறவுத் துறையின் சார்பில் நீடாமங்கலத்தில் மாற்றுத்திறனாளிகள், முதியவர்களுக்கு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் கூட்டுறவு சார் பதிவாளர் க.ரேவதி தலைமையிலும் வட்டவழங்கல் அலுவலர் ஜெயந்தி முன்னிலையிலும் ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன், பேரூராட்சி முன்னாள் தலைவர் இரா.இராஜசேகரன் ஆகியோர் பயனாளிகளுக்கு அவர்கள் இல்லத்தில் பொருள்களை வழங்கினர். பொதுக்குழு உறுப்பினர் பி.கமாலுதீன், மாவட்ட மகளிர் அணி தலைவர் ராணிசேகர், கூட்டுறவு துறையைச் சேர்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.